**ரொஷிபா**

குளிர்சாதனப் பெட்டிகள்,
மின் விசிறிகள்.
சர்வதேச தரத்திலானது
உங்கள் இல்லங்களுக்கு
அவசியம் தேவை.
சிறிதளவே கையிருப்பில் உண்டு.
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284



★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஐப்பசி 4 ஜுலைஹகி: 18 இதழ்: 152
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 21-10-78



காலத்திற்கு ஏற்ற
இறக்குமதி செய்யப்பட்ட
பல பொருட்கள்
தாராளமாகக் கிடைக்கும்
- மணிக்கூடுகள்
- கசெட் றேடியோக்கள்
- 3 விசை மிக்சர்
- காப்பி கிறைண்டர்
- எலெக்ரோனிக் கருவிகள்

சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284


### கடந்த ஆட்சிக்காலப் பிரமுகர் ஒருவர்

# நோர்வேயிடமிருந்து $4\frac{1}{2}$ லட்சம் தரகுப் பணம் வாங்கினாராம்!

## கடற்றொழில் அமைச்சர் பாராளுமன்றத்தில் தகவல்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நோர்வே நாட்டுடன் இழுவைப்படகுவிற்பனை குறித்து செய்யப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக இலங்கைப் பிரமுகர் ஒருவர் நாலரை லட்சம் ரூபாவை தரகுப்பணமாகப் பெற்றுக்கொண்டார்.

இத் தகவலை கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இழுவைப் படகுகளை இலங்கைக்கு விற்பனைசெய்வது குறித்து நோர்வே நிறுவனம் ஒன்றுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு அந்த நிறுவனத்திடம் 30 லட்சம்ரூபா தரகுப்பணமாகக் கேட்கப்பட்டது. ஆனால் நாலரை லட்சம் ரூபாவே கொடுக்கப் பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைப் பிரமுகர் [வி. ஐ. பி] ஒருவருக்கு நாலரை லட்சம் ரூபா தரகுப் பணம் கொடுத்ததாகக் கூறிய அந்த நிறுவனம் யார் அந்த பிரமுகர் என்பதுபற்றி கூற மறுத்துவிட்டதென்றும் திரு. பெரேரா தெரிவித்தார். (இ)

## வரவு-செலவுத் திட்டம் நவ. 15-ல் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

1979ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நவம்பர் மாதம் 5ந்திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும.

அதற்குமுன்னர் நவம்பர் மாதம் 7ம் திகதி புதிய வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீடுகளை நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதம் அடுத்த மாதம் 20ம் திகதி ஆரம்பமாகும். (இ)

## சிறு மோதல்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரவு யாழ் பஸ் நிலையத்துக்கு முன்பாக வாடகைக்கார்ச் சாரதி ஒருவருக்கும் காக்சட்டை அணிந்த ஒரு கோஷ்டியினருக்குமிடையில் ஏற்பட்ட சிறுமோதல் காரணமாக வழியில் சென்ற சிலருக்கும் கல்வீச்சுக் காயம் ஏற்பட்டதாகவும் இரவு பத்து மணிக்கு முன்னரே பஸ்நிலையப்பகுதியில் வாடகைக் கார்களின் சேவை நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் தெரிகிறது.

## தமிழ் ஈழத்தின் சகல மாவட்ட மந்திரி பதவிகளாலும் ஆராயப்படும்

### தலைமைப்பீட முடிவே இறுதியானது என்றும் கூறுகிறார் ஆனந்தசங்கரி

(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை மீட்டு 'தமிழ்ஈழம்' அமைக்கும் பணியில் தமிழர் கூட்டணி இப்போது ஈடுபட்டு வருகிறது இவ்வேளையில் தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை உள்ளடக்கிய மாவட்டங்களின் அமைச்சர் பதவிகளைக் கூட்டணி ஏற்க வேண்டுமா என்ற நிலை ஏற்பட்டால் அது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம். அதை விடுத்து இரண்டு, மூன்று என்று அப்பதவியைப் பேரம்பேசக் கூட்டணி தயாராக இல்லை.

இவ்வாறு கிளிநொச்சி எம். குறித்து கருத்து தெரிவித்துள்
பி. திரு வி. ஆனந்தசங்கரி ளார்.
மாவட்ட அமைச்சர் பதவி அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:

எமது பிரதேசத்தின் பெரும் பகுதியை மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டு இரண்டு ஒன்று என்று பேரம்பேசிப் பதவியை நாம் பெற்றுக் கொள்வதில் என்ன பயன்? மாவட்ட அதிகாரி என்பதற்குப்பதிலாக மாவட்ட அமைச்சர் என்ற பெயரைக்கொண்டு அமைச்சர் என்பது அரசாங்கத்தின் அங்கம் என்று வீண் அர்த்தம் கொள்வதில் உண்மையில்லை.

தத்தமது மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு நியமிக்கப்படும் அதிகாரிகளை அமைச்சர் என்று அழைப்பதில் என்ன அர்த்தம் என்பது புரியவில்லை. அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்தான் ஒத்த கருத்தினைக் கொண்டதாக இருக்கவேண்டும். மாவட்ட அதிகாரிகள் அப்படியிருக்கவேண்டும் என்பதில்லையே!

மாவட்ட அமைச்சர் பதவி தொடர்பாகக் கூட்டணிக்குள்

]6ம் பக்கம் பார்க்க]

### இந்திய - பாக். டெஸ்ட்

## இந்தியா 462-9 விஸ்வநாத் - 145

பைசலாபாத், அக் 20

இந்திய-பாகிஸ்தான் முதலாவது கிரிக்கட் டெஸ்ட் வெற்றிதோல்வியின்றியே முடிவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

3 விக்கட் இழப்புக்கு 291 ஓட்டங்களைப் பெற்றநிலையில் இன்று நான்காவது நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இந்தியா தேநீர் இடைவேளைக்குப் பின்னர் 9 விக்கட்டுகள் இழப்புக்கு 426 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

பிரமாதமாக ஆடிய குண்

(6-ம் பக்கம் பார்க்க)


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் காலயுக்தி வருஷம் ஐப்பசி மாதம் 5-ந் திகதி (22-10-78) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 9-45 மணிவரை உள்ள சுப முகூர்த்த வேளையில்

எனது புத்திரன் திருநிறை செல்வன்
ஞானசேகரம்
(பங்காளர் ராஜு ஸ்ரோர்ஸ்,
யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி
சந்திரா தேவி
அவர்களுக்கும்

தொண்டமானாறு செல்வச்சந்நதி முருகன் ஆலயத்தில் திருவருள் துணையால் திருமணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

வரவேற்பு :- மணமகன் இல்லத்தில் அன்று மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

திருமதி கனகம்மா காத்திலிங்கம்
மெயின் வீதி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

சி. வே. சிவசுப்பிரமணியமும் பாரியாரும்
உரிமையாளர்
சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி
வல்வெட்டித்துறை.
ராஜு ஸ்ரோர்ஸ்
67, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

18-10-78 0603


## அமிருக்கு தமிழகத்தில் பெரும் வரவேற்பு ஏற்பாடு

சென்னை, அக். 20

இம்மாத இறுதியில் இந்தியா வரும் இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளருமான திரு அ. அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு தமிழகத்தில் சிறப்பான வரவேற்பளிக்க, உலகத்தமிழர் பண்பாட்டுக்கழகம் ஒழுங்குசெய்துள்ளது

உலகத் தமிழர் பண்பாட்டுக்கழகத் தலைவர் செல்வி எஸ். தன்மானம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

திரு அ. அமிர்தலிங்கத்துக்கும் அவரது துணைவியார் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்துக்கும் திருச்சி, சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் பொது வரவேற்புக்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

வரவேற்பு நிகழ்ச்சிகளில் தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன், தி. மு. க. தலைவர் கலைஞர் திரு. மு கருணாநிதி இந்திய மத்திய எரிபொருள் அமைச்சர் திரு இராமச்சந்திரன், காந்தி - காமராஜ் கட்சித் தலைவர் திரு குமரி அனந்தன் உட்பட பல முக்கிய அரசியல் தலைவர்களும் உரையாற்றுவார்கள். (கெ-இ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி கடலையிலிருந்து ½ மைல் தூரத்தில் தோட்டம் செய்யக்கூடிய மின்சார வசதி பெறக்கூடிய பத்து பரப்பு காணி விற்கப்படும். தொடர்பு: இரா. புவனேந்திரன் பூதர் மடம் பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு. 0607

3 சிலிண்டர் லிஸ்ரர் றேடியேற்றர் மொடல் இயந்திரப் படகு விற்பனைக்குண்டு. சென்: பீற்றஸ் ஐஸ் பக்ரறி, முல்லைத் தீவு. 0589

புதிய இரண்டு சக்கர குபோடா உழவு இயந்திரம் ஒன்று விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். சி. சாந்தகுமார் தனவத்தை, அச்சுவேலி. 0616

### தேவை

பிடவை விற்பனையில் அனுபவம் வாய்ந்த நற்பழக்கம் உள்ள விற்பனையாளர்கள் தேவை. உடன் நேரில் வரவும். செல்லமுத்தாஸ் 55, 56, நவீனசந்தை, யாழ்ப்பாணம். 0614

### வகுப்புக்கள்

G. C. E. O. L, A. L. ஆங்கில வகுப்புக்களும் பேச்சு ஆங்கிலமும் (Spoken English) காலை, மாலைகளிலும் சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் கற்பிக்கப்படுகின்றன. குளிரூட்டல் வகுப்புக்களும் (Refrigeration and Air-Conditioning) தையல், சுருக்கெழுத்து, தட்டச்சு வகுப்புக்களும் நடைபெறுகின்றன. புதிதாகச் சேரவிரும்புவோர் 21-10-78-க்கு முன்னர் சேருக. G. C. E. O. L. A. L. விஞ்ஞானம், வர்த்தகம், கலைவகுப்புக்களுகுரியஎல்லாப்பாடங்களும் கற்பிக்கப்படும். I. C. M A. A. C. C. A Chartered Accountancy வகுப்புக்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். புதிய வகுப்புக்கள் 28-10-78 காலை ஆரம்பமாகும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம் 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 0604

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## சுழிபுரம் கிராமசபை ஏலவிற்பனை திருத்தம்

பழைய ஜி. ஐ. பைப்புகள் 1 1/2'', 2''

மேற்படி ஏலவிற்பனை 25-10-78-ம் திகதி புதன் கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். 16-10-78-ம் திகதி பத்திரிகையில் காலை 1-00 மணிக்கு என வெளிவந்தது தவறாகும்.

க. ஞானபாஸ்கரன்
விசேட ஆணையாளர்
கிராமசபை,
சுழிபுரம்.

கிராமசபை அலுவலகம்
சுழிபுரம்.
19-10-78 0581

## துணுக்காய்ப் பகுதி ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### தட்டெழுத்தாளர் தரம் 11

1. தகைமைகள்

(அ) க. பொ. த. ப பரீட்சையில் தட்டெழுத்து உட்பட ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

(ஆ) தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தட்டெழுத்தில் சித்தியடைந்த சான்றிதழ் உடையவராய் இருத்தல் வேண்டும். நிமிடத்துக்கு 30 சொற்கள் என்றபடியான வேகமும்

2. வயது

20க்கும் 35க்கும் உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

3. வேதனம்

175 × 290
―――――――
7·50×10, 10 × 4

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன. 31-10-78-ந் திகதிக்கு முன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பம் அனுப்பும் பதவியினைக் குறிப்பிட்டுத் தலைவர், துணுக்காய்ப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், துணுக்காய் என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

தலைவர்.
துணுக்காய்ப் பகுதிப்
ப. நோ. கூ. சங்கம்,
துணுக்காய்.
0611

## கந்தசஷ்டி விழா

[கொழும்பு]

கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நவம்பர் முதலாம் திகதி முதல், ஆறும் திகதி வரை கந்தசஷ்டி விரதமும் பத்தாம் திகதி வரை விழாக்களும் நடைபெற உள்ளன.

நவம்பர் 6-ந் திகதி சூரசங்கார உற்சவ விழா நடைபெறும். இவ்விழாத் தினத்தன்று பிற்பகல் 3 மணிக்கு விசேட சமயச் சொற்பொழிவும், மாலை அபிஷேகமும் அலங்கார உற்சவமும் சண்முகார்ச்சனையும் நடைபெறும்.

திருவிழாக்கள் முடிந்த பின்னர் கொழும்பு நகரின் சகல இடங்களுக்கும் செல்வதற்கான விசேட இ. போ. ச. பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. [ஊ]

## ஏலவிற்பனை அறிவித்தல்

1978-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபத்தேழாம் திகதி (1978-10-27) வெள்ளி காலை பத்து மணிக்கு முத்திரைச்சந்தையில் மகோக்கனி மரம் ஏலம் போடப்படும்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,

வேலைப்பகுதி.
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
18-10-78 0619

## நகரசபை 'கேபிள்' திருட்டு
### ஊழியர்கள் உட்பட 10 பேர் கைது

(நெல்லியடி)

பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான 3000 ரூபா பெறுமதியான மின்சார 'கேபிள்'கள் திருட்டு சம்பந்தமாக பருத்தித்துறை பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு திருட்டுப் பொருள்களுடன் 10 சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர்.

பத்து சந்தேக நபர்களும் பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது நவம்பர் மாதம் 2-ம் திகதிவரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் அநேகர் மேற்படி நகரசபையின் ஊழியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர்களை சார்ஜண்ட் செ. மாணிக்கராசா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி கைது செய்தது. இத்திருட்டு சம்பந்தமாக யாழ்ப்பாணம் கரையூர் பகுதிகளிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

## சமயக் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் தமிழ் இந்து அறச்சாலைகள் ஒன்றியத்தின் செயலாக்கக் கருத்தரங்கு இன்று காலை யாழ். சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் நீதிபதி திரு. க. ஞானச்சந்திரனல் குத்து விளக்கேற்றி ஆரம்பித்துவைக்கப்படும்.

வதிரி பரமானந்தாசிரம நிர்வாகி ஸ்ரீ பரமானந்தசுவாமிகள் தலைமையில் ''சைவ போதகர் பயிற்சிநிலையம்நிறுவுதல்''பற்றி கருத்தரங்கு நடைபெறும் இதில் திரு. க. சி. குலரத்தினம், செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உட்படப் பலர் கருத்துரைவழங்குவார்கள்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையாவின் ஆரம்ப உரையினை அடுத்து இக்கருத்தரங்கு ஆரம்பமாகும். [ஊ]

## மழை வேண்டி கொடும்பாவி

[பண்டத்தரிப்பு]

பருவ மழை நீண்ட காலமாக பெய்யாத காரணத்தினல், மனழயை வேண்டி அளவெட்டியில் கொடும்பாவி கட்டி நள்ளிரவு நேரத்தில் ஊர்வலமாகக் கொண்டு சென்றனர். பெருந்தொகையான இளைஞர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். முடிவில் சுடலையில் வைத்து தகனம் செய்யப்பட்டது.

## யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

## மலிவு விற்பனை

எமது சங்கத்தில் இருக்கும் துணிவகைகள் 20-ந் திகதிக்கும் 25-ந் திகதிக்குமிடையில்


ரவுண்சொப் கிளை
அரியாலை கிளை
பிரதான சில்லறை விற்பனவு நிலையம்

ஆகியவற்றில் வைத்து மலிவு விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.


பதில் பொதுமுகாமையாளர்.

74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978-10-19. 0610

## யூ ஆசா உத்வேகத்துக்கு மற்றுமோர் பெயர்



இயக்க மோட்டர்கள் விர்...
என செயல்படும்
பிளக்குகள் பளிச்சிடும்...
யந்திரங்கள் உயிர்பெற்றெழும்...
சக்கரங்கள் சுழலும்...
லைட்டுகள் பிரகாசிக்கும்...
''யூஆசா'' சக்தியினல் பொருட்கள்
நகரத் தொடங்கி விடுகின்றன




விற்பனைக்கு பிந்திய சேவை :
நாடு பூராவுமுள்ள அதிகாரம் பெற்ற விற்பனையாளர் மூலமும்
மற்றும்
யூஆசா சேவை நிலையம்
161, பார்ஸன்ஸ் றேட்,
கொழும்பு - 2

தயாரிப்பாளர்கள் :
**அஸோசியேட்டட் பற்றறீஸ் கம்பனி லிமிட்.**
ஏக விநியோகஸ்தர்கள் :
**E. B. கிறீஸி அன் கம்பனி லிமிட்.**
98, சிறி சங்கராஜ மாவத்த, கொழும்பு-10, தொலைபேசி : 2131-4

ஈழநாடு
The Eelanaadu

## வானொலி சேவை

மக்கள் பொழுது போக்கு சாதனங்களில் வானொலி முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

எனவே வானொலி நிகழ்ச்சிகளை நாட்டின் எல்லா பகுதிகளிலும் மக்கள் தெளிவாகக் கேட்பதற்கு வழி செய்வது ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் கடமை.

வடபகுதியில் காலை ஐந்து முப்பது] தொடக்கம் ஏழு மணி வரையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சேவை ஒன்றின் நிகழ்ச்சிகளையும் அதன் பின்னர் சேவை இரண்டின் நிகழ்ச்சிகளையும் கிழமை நாட்களில் மண்டைதீவு உப வானொலி அஞ்சல் நிலையத்தின் வாயிலாகத் தெளிவாகக் கேட்கமுடிகின்றது. இதர சமயங்களில் சேவை இரண்டின் நிகழ்ச்சிகளை மண்டைதீவு உபநிலையம் மூலம் அஞ்சல் செய்கிறார்கள். மண்டதீவு உப அஞ்சல் நிலையம் மூலம் இரண்டு சேவைகளையும் ஒரேசமயம் அஞ்சல் செய்வதற்கு இப்பொழுது வசதியில்லை யென்று தெரிகின்றது.

மண்டைதீவு உபஅஞ்சல் நிலையம் மூலமாக அஞ்சல் செய்யப்படாத சேவைகள் வடக்கில் பெரும்பாலும் தெளிவாகக்கேட் பதில்லை.

இதனால் இந்த உப அஞ்சல் நிலையம் மூலமாக அஞ்சலாகும் நிகழ்ச்சிகளையே இப்பகுதிமக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பெரிதும் கேட்டுத் தீர்க்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். அதுவும்கூட ஒழுங்காகவும் சரியாகவும் கேட்க முடிவதில்லை.

நாட்டின் பெரிய தலைவர் ஒருவர் விடுக்கும் செய்தி வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கிறது. மிக முக்கியமான ஒரு விஷயத்தை அவர் மிக அழுத்தமாக எடுத்துக்கூறும் சமயத்தில் ''உஸ் உஸ்......'', என்று ஒரு சத்தம்! இது சிலசமயம் இரண்டு நிமிடங்கள் வரையும் கூட நீடித்துவிடுகிறது. அதற்குள் அத்தலைவரின் பேச்சில் முக்கியபகுதி காற்றில் போய்விடுகின்றது சில சமயம் இந்த ''உஸ்ஸ்......'' சத்தம் இல்லாமலே வானொலி மௌனம் சாதித்துவிடுகின்றது.

மீண்டும் நிகழ்ச்சி ஆரம்பமாகும்போது வானொலியில் அதற்காக கவலைதெரிவிப்பதும்கூட இல்லை. இவ்வாறான கோளாறுகள் அடிக்கடி நிகழ்வதால் வானொலி அறிவிப்பாளர்கள் அதுபற்றி கவலைதெரிவிக்கவேண்டிய அவசியமில்லையென கருதக்கூடும். அல்லது அவர்களுக்கே தெரியாமல் இந்தக் கோளாறுகள் உப அஞ்சல் நிலையத்தில் ஏற்படுவதாய் இருக்கும்.

எதுவானாலும் இந்தக் கோளாறு எங்கே இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்து தீர்க்க வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும்.

வானொலிப்பெட்டிகளுக்காக வருடம்தோறும் அனுமதிப்பத்திரத்துக்கென பணம் அறவிடப்படுகின்றது. இந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதிலுள்ள பிரச்னைகள்பற்றி தெளிவாக ஆராய்வதற்கு அரசு ஒரு குழுவை நியமித்து அதன்படி நடவடிக்கையும் எடுத்துள்ளது.

வானொலியை நம்பி விளம்பரத்துக்காக வர்த்தகர்கள் பெருந்தொகைப் பணம் செலுத்துகிறார்கள்.

எனவே பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பணத்துக்கு ஏற்றாற்போல் சேவைகள் தெளிவாகவும் தடங்கல் இல்லாமலும் இருப்பது அவசியம்.

மத்தியகிழக்கு நாடுகளுக்கும் கூட ஒலிபரப்பை விஸ்தரிப்பதுபற்றி ஆராயப்படும் இந்த வேளையில் உள்நாட்டில் சீரான வானொலி சேவைக்கு வழி செய்யப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தத் தேவையில்லை.

# "தமிழர் சமாதானத்தை நாடுபவர்கள்; கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள்"

## சன்சோனிக் கமிஷன்முன் திருமலை எம். பி. சாட்சியம்

(திருகோணமலை)

'திருமலையில் உள்ள அரசமரங்களைக் கணக்கெடுப்பது எனதுவேலையல்ல. அரசமரங்கள் வெட்டப்பட்டதற்குக்காரணம் தமிழர்கள்தான் என்பதை மறுக்கிறேன். தமிழர்கள் சமாதானத்தை நாடுபவர்கள்; கடவுள்பக்தி உள்ளவர்கள்.'

இவ்வாறு திருமலை எம். பி திரு இரா சம்பந்தன் சன்சோனிக்கமிஷன்முன் குறுக்குவிசாரணை செய்யப்படுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: 'கோணேசர் ஆலயத்திற்கு சிங்கள மக்களும் கும்பிடச் செல்கின்றனர். காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயகா இந்த ஆலயத்தை புதுப்பித்துக்கட்ட எந்தவித உதவியும் செய்யவில்லை. காலஞ் சென்ற தலைவர் எஸ் ஜே வி. செல்வநாயகத்தின் அஸ்தி திருமலைக்குக் கொண்டுவரப்பட்டது எனக்கு அரசியல் லாபம் தேடியல்ல. அஸ்தியைத் தொடர்ந்து திருமலையில் ஏற்பட்ட கலவரத்தால் நான் கணிசமான அளவு சிங்களவாக்குகளையும் இழந்தேன்.

திருமலைப் பட்டினம் முழுவதும் பௌத்த ஸ்தாபனங்கள் இருந்தன என்பதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது [சில இடங்களில் இருந்தன எனக் கூறலாம், என்றார். (உ)

# "திருமலை சிறிமாபுரத்தில் சிங்களவர் தாக்கப்பட்டதாக அறிந்தேன்"

## சன்சோனி கமிஷன்முன் அனுராதபுரவர்த்தகர் சாட்சியம்

(திருகோணமலை)

'சிறிமாபுரத்தில் உள்ள சிங்களவர்களைத் தமிழர்கள் தாக்கியதாக அறிந்தேன்'' என்று சன்சோனிக்கமிஷன் விசாரணையில் அனுராதபுரத்தில் வசித்துவரும் வர்த்தகர் வி. சிரிசேன என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது: ''நான் 17 வருடங்களாகத் திருமலையில் வசித்தேன். அமரர் செல்வநாயகத்தின் அஸ்தியைக் கொண்டுவந்தவர்கள் 'சிறிமா ஒழிக', 'ஜே. ஆர். ஒழிக', 'சிங்களம் ஒழிக', 'தமிழ் நீடுழி வாழ்க' என்ற கோஷங்களைக் கோஷித்தவண்ணம் வந்தனர்.

### ஹபரணைக்கு அப்பால் துரத்தவேண்டும்

அங்கு பேசியவர்களில் ஒருவர், திருமலையிலிருந்து சிங்களவர்களை ஹபரணைக்கு அப்பால் துரத்தியடிக்கவேண்டும் என்று கூறினார் சிறிமா புரத்திலுள்ள சிங்களவர்களைத் தமிழர்கள் தாக்கியதாக அறிந்தேன்.

திரு. சிவா ராஜரத்தினத்தால் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது கூறியதாவது; '1970ம் ஆண்டு முதல் நான் பகிரங்கமாக ஐ. தே கட்சியை ஆதரித்து வேலைசெய்து வருகிறேன். 1970ல் அமரர் ஆர். ஜி. சேனநாயகாவுக்காக வேலைசெய்தேன். 1970ல் எனது தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் திருமலையில் போட்டியிட்ட திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கடைசித் தமிழனின் தோல் உரிக்கப்பட்டு அவனின் தோலைக்கொண்டு நபான் அடிக்கும்வரை நிம்மதியாக இருக்கமாட்டேன்' எனக் கூறவில்லை என்றார். [உ]

## நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, அடுத்த மாதம் 23ம் திகதி நாவலர் பெருமானின் குருபூசையை நடாத்த முடிவுசெய்துள்ளது என்று சபைச் செயலாளர் திரு. அ. ஜெ. செந்தில்நாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விழாவில், புராண படலமும், அன்னதானமும், யாழ். வளாக [விரிவுரையாளர்களின் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (புலோலி நிரு.)

## இன்று கூடி ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின்விசேஷ பொதுக் கூட்டமொன்று இன்று காலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் தலைவர் திரு. து. விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

கட்டணப் பணத்தை உயர்த்துவதன் மூலம் வைப்பு நிதியை ஸ்திரப்படுத்தி, சகாயப் பணத்தைக் கூடுதலாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படும். (அ)

## மணிவாக்கு

உன்னிடம் பணம் இருக்கும்போது என்னை உனக்குத் தெரியாது. உன்னிடம் பணம் இல்லாவிட்டால் உன்னை எனக்குத் தெரியாது

— தமிஅவாணன்

# "வடக்கு, கிழக்கை சட்டரீதியாக தமிழர் பிரதேசங்களாக அங்கீகரிக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணத்தைத்தமிழர் வாழும் பாரம்பரியபிரதேசம் என்றுசட்டரீதியாக அங்கிகாரம் அளிப்பதுடன் தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டும் என்று அரசைக் கோரும் தீர்மானம், ஸ்ரீலங்கா தபால் தந்தி தொலைதொடர்பு சேவையாளர் சங்க கூட்டத்தில் நிறைவேறியது.

சங்க மண்டபத்தில் திரு. மகேசன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில், செந்தமிழர் இயக்கச் செயலாளரான திரு வி. பொன்னம்பலம் பேசுகையில், தமிழரின் சுயநிர்ணயம் பற்றிய தீர்மானத்தைசங்கம் நிறைவேற்றியதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும்இதற்கு ஆதரவாக ஏனைய தொழிற் சங்கங்களுடன் சேர்ந்து அணிதிரட்டவேண்டும் என்றும் இதற்கென ஒருதேசியதொழிற் சங்க சம்மேளனம் உருவாக வேண்டுமென்றும் பிரச்னையை அரசு தீர்க்காவிடில், நிச்சயமாக இந்தநாடு ஒரு அழிவை நோக்கிச்செல்ல நேருமென்றும் கூறினார்.

தாய்ச் சங்கத்தைச் சேர்ந்த தலைவர் கே. எல். ரொட்ரிக்கோ பேசுகையில் நிர்வாகத்தில் நடைமுறையில் உள்ள கஷ்டங்களை விளக்கி சம்பள உயர்வு மிகஅவசியம் என்று கூறினார். இதற்காக ஏனைய சங்கங்களையும் சேர்த்து ஓர் ஐக்கியப்பட்ட போராட்டத்தை நடத்துவது அவசியம் என்றும் அவர் கூறினார்

அனுராதபுரம் தபால் கந்தோர் ஊழியர் திரு குகதாசன் பேசுகையில்; தமிழர் பிரச்னைக்கு ஒருநிரந்தரத் தீர்வுகாணத்தவறின் தேசிய ஒற்றுமைக்கு இடமில்லை என்றும் இன ரீதியாகச் செயல்பட்டு தொழிலாளர்வர்க்கம் தங்கள் கோரிக்கைகளைவென்றெடுக்க ஆதாரம் இல்லை என்பது சோஷலிசத்தின் நம்பிக்கையாதலால், சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர் உரிமைக்கான போராட்டம் நடத்த வேண்டுமென்றும் தமிழர்களின் பிரதேசம் அவர்களின் தனித்துவம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் ஏனைய தொழிற்சங்கங்களையும் சேர்த்துப் போராட ஒத்துழைக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

நடப்புவருடத் தலைவராக திரு. மகேசனும், செயலாளராக சூரியமூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

## யாழ். இ.போ.ச. டிப்போவில் நடந்த வாணி விழா

(கொக்குவில்)

''பெண்தெய்வங்கள் மூன்றின் பெருமையை விளக்கும் பெருநாளே நவராத்திரி எனப்படும்'' என்று கோண்டாவில் பஸ்டிப்போவில் நடைபெற்ற விஜயதசமி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் அரசாங்க அதிபர் லயனல் பெர்ணாண்டோ கூறினார்.

வடபிரதேச முகாமையாளர் திரு. எஸ். தியாகராஜா தலைமையில் விழா நடைபெற்றது. யாழ். அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

முதல் மூன்று நாட்களில் வீரத்தின் தெய்வமாகிய சக்தியை வழிபடுகின்றோம். அடுத்து செல்வத்தின் தெய்வமாகிய இலக்குமியையும் கல்வித் தெய்வமாகிய சரஸ்வதியையும் வழிபடுகின்றோம்.

ஒவ்வொருவருக்கும் வீரம் அவசியமிருக்கவேண்டும். அந்த வீரம், தீயவற்றை ஒழித்து நல்லவற்றைக் காப்பாற்றப் பயன்படல் வேண்டும். அதேபோல செல்வத்தைத் தேட ஒவ்வொருவரும் அயராது பாடுபடவேண்டும். தீய வழியில் செல்வத்தைத் தேடாமல் தேடிய செல்வத்தைத் தீயவழியில் செலவிடாமல் நாட்டிற்கும் எமக்கும் நன்மை பயக்கக்கூடிய விதத்தில் அப்பணத்தைச் செலவிடவேண்டும். அதேபோல் கல்வியையும் நல்ல நோக்கத்திற்காக பயன்படுத்தவேண்டும்.

''நாம் கற்ற கல்வியைக் கொண்டு உலகத்தை வாழ வைக்கவும் முடியும் அதேபோல் கற்றகல்வியின் மூலம் உலகை அழிக்கவும் முடியும். தீயவற்றை அழித்து நல்லவற்றை பாதுகாக்க அவதாரமெடுத்த பெண் தெய்வங்களை வணங்கும் இந்த நாட்களை நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலந்தொட்டு கொண்டாடி வருகின்றேன் என்று கூறினார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும் சொற்

[5-ம் பக்கம் பார்க்க]

# ஸாம்பியாவுக்குள் புகுந்து

# ரொடீஷியா கொடூர தாக்குதல்

## 500 வீரர் பலி

லுசாக்கா, அக். 20

**ஸாம்பியா எல்லையைக் கடந்து ரொடீஷியத்துருப்புகள் நடத்திய பயங்கரத் தாக்குதல்களினுல் 500 கெரிலா வீரர்கள் பலியாகியுள்ளதா லுசாக்கா அறிக்கைகள் தெரிவிக்கின்றன.**

**ஸிம்பாவேவில் கெரிலா படைத்தளம் மீது நடைபெற்ற இக்கொடூரத் தாக்குதல்களினுல் என்கோமா தலைமையிலான படைக்குப் பெரும் நாசம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.**

ரொடீஷியாவின் வெள்ளையர் சிறுபான்மை அரசின் துருப்புகளே இத்தாக்குதல்களை நடத்தியுள்ளன. இத்தாக்குதல் நடைபெறவிருப்பது குறித்து முன்னரே ஸாம்பியாவுக்கு அறிவிக்கப்பட்டதாக ரொடீஷிய அறிக்கை ஒன்று தெரிவித்தது.

இதே வேளை, ஸாம்பிய மந்திரிசபை தற்போதைய நிலைமை பற்றி ஆராயும் பொருட்டு தனது கூட்டத்தை அவசரமாக நடத்த விருந்தது. (உ)

## "சதுரங்க ஆட்டத்தில் அரபு மக்கள் சொக்கட்டான்களல்ல!
### -- பிரேஷ்னேவ்

மாஸ்கோ, அக். 20

'எதிரிகளுக்கு சலுகை வழங்குவதால் மத்திய கிழக்குப் பிரச்னை தீரப்போவதில்லை. அது நாடு விஸ்தரிப்புக்கு சத் தூட்டுவதாக இருக்கும். மத்திய கிழக்கில் நெருக்கடி தொடர்ந்து நிலவும்'' இவ்வாறு சிரியா ஜனாதிபதி ஹஃபிரி அல்-அஸ்ஸாதுக்கு, கிரெம்ளினில் அளித்த இராப்போசன விருந்துபசாரத்தில் சோவியத் ஜனாதிபதி பிரெஷ்னேவ் கூறினார்.

கேம்ப் டேவிட் உடன்பாட்டை எதிர்க்கும் அரபு நாடுகளின் மகாநாடு முடிவடைந்ததும், ஜனாதிபதி அஸ்ஸாத் மாஸ்கோ வந்திருந்தார். அரபு-இஸ்ரேலிய பிணக்கின் காரணங்களும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் விளைவுகளும் களைந்தெறியப்படும் வரை மத்திய கிழக்கில் அமைதி நிலவுவது அசாத்தியம் என்று பிரெஷ்னேவ் சுட்டிக்காட்டினார்.

'இஸ்ரேலிய-எகிப்திய தனி வழிப் பேச்சுவார்த்தைகளால் பரிகாரம் காணமுடியாது. கெய்ரோவில் சரணுகதிப் போக்கை மற்ற அரபுநாடுகள் எதிர்க்கின்றன' என்று கூறிய சோவியத் தலைவர், 'மற்றவர்களின் சதுரங்க ஆட்டத்தில் இனிமேலும் அரபு மக்கள் ஊமை சொக்கட்டான்கள் அல்ல; அவர்களுடைய தலைவிதியை அவர்களே நிர்ணயிக்கப் போகிறார்கள்' என்று வலியுறுத்தினார்.

'அரபு மக்கள் இல்லாமல் மத்திய கிழக்குப் பிரச்னையை தீர்க்க முடியாது. இதற்கு ஒரேவழி ஜெனிவா மகாநாட்டை மீண்டும் கூட்டுவதுதான். ஜெனிவாவுக்கு கதவு திறந்து கிடக்கிறது.' என்றும் பிரேஷ்னேவ் கூறினார்.

## மதுரை பாடசாலைகளுக்கு வள்ளுவர், பாண்டியன், பாரி, வி. க பெயர்கள்
### மாநகராட்சி தீர்மானம்

மதுரை, அக். 20

மதுரை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் பலவற்றிற்கு திருவள்ளுவர், கம்பன், பாரதியார், தமிழ்த்தென்றல் திரு வி. க., பாண்டியன், நெடுஞ்செழியன், பாரி முதலானேரின் பெயர்கள் சூட்டப்படவுள்ளன.

இதற்கான தீர்மானம் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைப் பொதுச் செயலாளராகக் கொண்ட அ. இ. அ தி.மு.க. வின் நிர்வாகம் நடைபெறுகின்ற மதுரை மாநகராட்சியில் மேயர் மதுரை முத்துவினுல் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நேற்று நடைபெற்ற மதுரை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

ஈ. வெ. ரா. பெரியார் நூற்றாண்டு விழாவை நாளையும் மறுதினமும் கொண்டாடுவதென்றும் பெரியாரின் பெயர்களை மதுரை மாநகரவீதி, சதுக்கங்களுக்கு சூட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

## ரஷ்ய செம்மறிஆடுகள் பாரதத்திற்கு இறக்குமதி

புதுடில்லி, அக். 20

பாரதத்திற்கும், சோவியத் யூனியனுக்கும் இடையே செய்து கொள்ளப் பட்டுள்ள ஒரு ஒப்பந்தத்தின்படி, அசல் செம்மறி ஆடுகள் சோவியத் யூனியனில் இருந்து பாரதத்திற்கு இறக்குமதிசெய்யப்படும்,

அதிகாரிகள் பரிமாற்றம், விவசாய அபிவிருத்தி ஆகியவற்றிலும் இரு நாடுகளும் ஒத்துழைக்கும்.

இதற்கான உடன்படிக்கை நேற்று புதுடில்லியில் கைச்சாத்தானது. (உ)

## 5000 ரூபா நன்கொடை

சென்னை, அக். 20

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த இரு மீனவர்கள் கடலில் உயிரிழந்ததையடுத்து அவர்களது குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. (உ)

## எகிப்து - இஸ்ரேல் பேச்சுவார்த்தையில் தடங்கள்

வாஷிங்டன், அக். 20

வாஷிங்டனில் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இத் தடங்கல் நிலை நீடிக்கும் பட்சத்தில் இப்பேச்சுவார்த்தை தோல்வியிலேயே முடியும் என்று கருதப்படுகிறது.

இஸ்ரேலின்கருத்தை எகிப்து ஏற்றுக்கொள்ள மறுப்பதே இந் நிலைக்குக் காரணமாகும். (உ)

## வேலை நிறுத்தம் முடிவு

சென்னை, அக். 20

தேசிய துணி ஆலைக் கார்ப்பரேஷனைச் சேர்ந்த 13000 தொழிலாளர்கள் தமிழ் நாட்டில் செய்துவந்த எட்டு நாள் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

நிர்வாகத்திற்கும், தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டதையடுத்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. (உ)

## அமெரிக்க பணவீக்கக் குறைப்பு

வாஷிங்டன், அக். 20

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் பணவீக்கக் குறைப்புத் தொடர்பான தமது 2 வது திட்டத்தை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சமர்ப்பிப்பார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்தது. [உ]

## பாரதம் போர் விமானங்களை வாங்குவதால் பாக். கவலை

லாகூர், அக். 20

பாரதம் 200 நவீன போர் விமானங்களை பிரிட்டனிடம் இருந்து வாங்குவது குறித்து பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி அன்வர் சமீம் கவலை தெரிவித்துள்ளார்.

படை வீரர் மத்தியில் பேசிய அவர் ''இவ் விமானங்கள் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படலாம், அமைதிக்கு ஊறு விளையலாம்'' என்று அச்சம் தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க, பாரதம் போர் விமானங்களை பிரிட்டனிடம் வாங்குவது தற்போதுள்ள விமானங்கள் பழுதடைந்துவிட்டமையினுல்தான்'' என்று பாரத பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன் ராம் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## இந்திரா-பட்டீலை கம்யூ. கட்சி எதிர்க்கும்

கல்கத்தா, அக். 20

கர்நாடக மாநிலத்திலுள்ள சிக்மகளூர் தொகுதியில் தமது கட்சி நடுநிலைமைவகிக்காது என்றும் திருமதி காந்தியையும், திரு. வீரேந்திர பட்டீலையும் எதிர்த்துப் போட்டியிடும் என்றும் பாரத கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

இத்தகவல் நேற்று கல்கத்தாவில் வெளியிடப்பட்டது.

## "உரிமை உண்டு"

புதுடில்லி, அக். 20

"ஒரு பாரத பிரஜைக்கு நாட்டின் எந்தப் பாகத்திலும் போட்டியிட உரிமை உண்டு'' என்று திருமதி இந்திராகாந்தி தாம் போட்டியிடும் சிக்மகளூர் தொகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார். (உ)

## நமீபிய விவகாரம்

லண்டன், அக். 20

நமீபியாவின் எதிர்காலம் குறித்து தென்னுபிரிக்காவுக்கும் 5 மேற்கு நாடுகளுக்கும் இடையே புதிய இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ்வருடம் டிசம்பரில் நமீபியாவில் பொதுத்தேர்தல் நடத்துவதென்றும் சுதந்திரம் வழங்குவதற்கான அடுத்த நடவடிக்கையை அடுத்த வருடம் நடுப்பகுதியில் எடுப்பதென் இந்த இணக்கம் ஏற்பட்டது. என்றும் இது முழுமையான பயனைத் தருமெனத் தாம்கருதவில்லைஎன்றும் அமெரிக்கவெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் கருத்து வெளியிட்டுள்ளார். மேற்படி இணக்கத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

பாதுகாப்புச்சபை இம்மாதம் 23ம் திகதி கூடுகிறது. (உ)

## பகிஷ்காரம் இல்லை

மதுரை, அக். 20

மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பரீட்சைகளைப் பகிஷ்கரிப்பதென ஆசிரியர் சங்கம் எடுத்திருந்த முடிவு கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கல்வி மந்திரி திரு. அரங்கநாயகத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளையடுத்து இம்முடிவு கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. [உ]

## மறுப்பு

புதுடில்லி, அக் 20

அந்நிய செலாவணி குறைந்துவருகிறதென்ற திருமதி இந்திராகாந்தியின் குற்றச்சாட்டை மத்திய விவசாய அமைச்சர் திரு. பர்னுலா மறுத்துள்ளார். (உ)

## சீன விஜயம் குறித்து வாஜ்பாய் கருத்து

புதுடில்லி, அக். 20

தமது சீன விஜயம் மற்றைய நாடுகளுடனை பாரதத்தின் பாரம்பரிய உறவுகளை பாதிப்பாக அமையாது வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாய் கூறியுள்ளார்.

தமது அமைச்சின் பார்லிமெண்ட் கமிட்டிக்கூட்டத்தில் பேசுகையிலேயே அமைச்சர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பான கேம்ப் டேவிட் உடன்படிக்கையை பாரதம் வரவேற்கவில்லை என கூறிய அமைச்சர் இப்பிரச்னையில் சுமுகத்தீர்வு உறுதிப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இதேவேளை சீனவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு முன்னள் சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயணனும், ஜனதாக் கட்சிச்செயலாளர்களில் ஒருவரான திரு ரவிராயும் அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பாரதம் சுதந்திரமடைந்த வேளை இருந்த எல்லைளே மீண்டும் இருக்கவேண்டுமென்பது வலியுறுத்தப்படவேண்டுமென்றும் அவர்கள் கேட்டுள்ளனர். (உ)

### தமிழ் மெய் எழுத்துக்கள்:

# ஈ. வெ. ரா. யோசனையை தமிழக அரசு ஏற்றது

சென்னை, அக். 20

தமிழ் மெய் எழுத்துக்களில் ஈ. வெ ரா. பெரியார் கூறிய யோசனையின் பிரகாரம் சீர் திருத்த எழுத்துக்களைப் பயன்படுத்துவது என்று தமிழக அரசு முடிவுசெய்துள்ளது.

ஈ. வெ. ரா. நூற்றாண்டு விழா ஈரோட்டில் நடைபெற்றபோது பெரியாரின் இந்தயோசனையை தமிழக அரசு ஏற்கும் என்று முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உறுதியளித்திருந்தார்.

அச்சடிப்பதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க ஈ வெ. ராவின் இந்த யோசனை உதவும் என்பதாலேயே இம் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

பதினைந்து எழுத்துக்கள் சம்பந்தமாக இச் சீர்திருத்தம் கொண்டுவரப்படுமென அறிவித்த தமிழக அரசு; பாடசாலைகள், கல்லூரிகள், ஸ்தல ஸ்தாபனங்கள், இலாக்காக்கள் இதனைப் பின்பற்ற வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. (உ)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
முத்துராமன்-ஸ்ரீவித்யா
**காலங்களில் அவள் வசந்தம்**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
முத்துராமன்-ஜெய்சித்திரா
**இன்ஸ்பெக்டர்மனைவி**

## நிர்மாணவேலை பாதிப்பு!

(மட்டக்களப்பு)

வவுணதீவு-வலையிறவு பால நிர்மாண வேலைத்திட்ட வேலைகள் இயந்திராதிகள் பற்றுக்குறை காரணமாக மந்தமடைந்துள்ளது.

மேற்படி வேலைத் திட்டத்திற்கு வேவையான இயந்திராதிகளை தருவிப்பதற்கு ஆவன செய்யுமாறு மட்டக்களப்பு தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதிகளை பொதுசன வட்டாரங்கள் வலியுறுத்தியுள்ளன.

**சாந்தி** (யாழ்ப்பாணம்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் - சௌகார் - மேஜர்
பாலையா - நாகேஷ் நடித்த கே. பாலசந்தரின்
**பா மா வி ஜ ய ம்**

**REGAL** (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Rader MEn From the Moon
(Full Action Film)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**ஆ ல ய ம ணி**
(புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
**நினைவில் நின்றவள்**

**ஶ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 10-15, 2-15, 6-15 & 9-45
சிவாஜி ... சாவித்திரி ... பாலையா
சந்திரபாபு ... தங்கவேலு நடித்த
**காத்தவராயன்** (புத்தம்புதியபிரதி)

தினசரி 4 காட்சிகள் கடைசி வாரம்
**ராணி** (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(சினிமாஸ் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - தேவிகா
நடித்த
**வாழ்க்கைப்படகு**
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
**ஏமாளிகள்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., அஞ்சலிதேவி
நடித்த
**மர்மயோகி**
(புத்தம்புதிய பிரதி)

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 4-ந் திகதி

சனிக்கிழமை

(21-10-78)

**மேடம்:-** பணவருவாயில் திருப்பம் ஏற்படும், விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும், சிலர் உல்லாசப் பயணம் ஒன்றுக்கும் திட்டமிடுவார்கள்.

**இடபம்:-** வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும், வீணான சிந்தனைகளால் வேதனைப்படுவீர்கள், சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படும், துக்கதினம்.

**மிதுனம்:-** குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடு புதிர்போடும், வாழ்க்கையில் சோர்வுக்கு உடமுண்டு, சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்படும், சுகாதாரம் வேண்டும்.

**கடகம்:-** எழுத்தாளர்களுக்கு இன்று எழுச்சிமிக்கத் தினம், சிலர் வாழ்க்கையில் சன்மானம் கிடைப்பதற்கும் இடமுண்டாகும், குடும்ப வாழ்க்கையிலும் சுமுகமான சூழ்நிலைகள் உருவாகும்.

**சிம்மம்:-** சிந்தனை அலைகள் சீறிப்பாயும், எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள், போட்டி விவகாரத்தில் இறங்காது பொறுமையுடன் இருக்கவும்.

**கன்னி:-** வாகனச் சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம், வரவிலும் திருப்தி காணப்படும், அறிஞர்களின் தொடர்புகளுக்கும் இடமேற்படும்.

**துலாம்:** பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும், திறமைக்கு முதலிடம் உண்டு, பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும், இதயச் சுமை அகலும்.

**விருச்சிகம்:-** ஆயுத பீடைக்கு இடமுண்டு, அவசரப் போக்கைத் தவிர்க்கவும், தவறான பாதையைக் காட்டுவதற்கு எதிரிகள் காத்திருப்பர், மனத்திடம் வேண்டும்.

**தனுசு:-** கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம்பெறும், எதிர்ப்புகள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும், கண்ணியம் சேரும்.

**மகரம்:-** ஏமாற்றம் தாக்கும், எதிலும் தயக்கநிலை தென்படும், செய்தொழில் மூலம் நஷ்டத்திற்கிடமுண்டு, செலவினங்களைக் கட்டுப்படுத்தவும்.

**கும்பம்:-** பாக்கிய விருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும், தக்க சமயத்தில் உதவுவதற்கு தந்தை முன்வருவார், சிறப்பான தினம்.

**மீனம்:-** கடற்றொழிலாளர்களுக்குச் சிறப்பான தினம், இருப்பிட மாற்றம் ஏற்படின் சிறப்புடையதாகும், தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

சோதிடக்கலாநிதி

**திருமலை க. வேலுப்பிள்ளை**

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
CITY OF DEATH

## "பொருளாதாரதன்னிறைவுக்கு குளங்கள் புனரமைப்பு அவசியம்"

-- கோப்பாய் எம். பி.

(யாழ்ப்பாணம்)

''நாமனைவரும் இணைந்து பொருளாதாரவளத்தை உண்டாக்கவேண்டும். கிராமங்கள் வளமடைவதனால் நாட்டில் வளம் ஏற்படும்''

இவ்வாறு கோப்பாய்எம்.பி. திரு ஸி. கதிரவேலுப்பிள்ளை கோப்பாய்தெற்கு உச்சுவில் குளத்தை ஆளமாக்கும் சிரமதானப்பணியை ஆரம்பித்து வைத்த வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

கோப்பாய் எம். பி யுடன் தொழிலதிபர் திரு. கே. கனகராஜாவும் இச்சிரமதானத்தை மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் இவ்வாண்டு வேலைத்திட்டத்தில் இதுவொன்ருகும்.

திரு. கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில், 'எமது போராட்டம் நாட்டின் விடுதலையோடு நில்லாது பொருளாதார விடுதலையையும் இணைத்து செயற்பட வேண்டும். பொருளாதாரத் துறையிலும் நாம் எம்மை ஸ்திரப்படுத்தவேண்டும்'' என்ருர்.

திருவாளர்கள் சி. சிவநேசன், செ. சபாரத்தினம், கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. செ. பிறெட்ரிக் ஆகியோரும் பேசினர்.

செயலாளர் திரு. இ. தம்பித்துரை நன்றியுரை நிகழ்த்திஞர். (உ)

## கூட்டுச் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்புகளை மானிப்பாய் தொகுதியில் வலுப்படுத்துவது தொடர்பாக முன்னணியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. ஜி எஸ். பொன்சேகாவும், திரு. இரத்தினம் லக்ஷ்மிகாந்தனும் கூட்டாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இந்தவகையில் தொகுதியின் பல பாகங்களிலும் பரவலாகக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. [உ]

## டிக்கட் மோசடி

[புலோலி]

வவனியா பஸ் டிப்போவைச் சேர்ந்த மூன்று கண்டக்டர்களின் டிக்கட் மோசடி அம்பலமாகியுள்ளது.

இவர்கள் பொதிக்கட்டண டிக்கட்டுகளிலேயே இந்த மோசடியைப் புரிந்துள்ளனராம். இம்மோசடி குறித்து வடபிராந்திய இ. போ. ச சபை விசாரணை நடத்தி வருகிறது.

## இரகசியத்தெரிவு தீர்மானம் நிறைவேறியது

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நிர்வாக சபைக்கு கல்வித் திறமையும் சேவை மனப்பான்மையும் கொண்டவர்களை தெரிவு செய்யும் பொருட்டு நிர்வாக சபை உறுப்பினர்களின் தெரிவு இரகசிய வாக்கெடுப்பின் மூலம் இடம்பெற வேண்டும் என்று வைத்தியசாலை சபையின் விசேட பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இரகசியத் தெரிவுத் தீர்மானத்திற்கு 102 பேர் ஆதரவாகவும் 6 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

இத்தீர்மானத்திற்குக் கிடைத்த வெற்றி வைத்தியசாலையின் எதிர்கால முன்னேற்றத்திற்கு கிடைத்த வெற்றி என உறுப்பினர்கள் பலரும் மகிழ்ச்சி தெரிவித்தனர். (இ)

## யாழ். ...

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

பொழிவாற்றினர்கலைக்கோயில் அமரகலா நாட்டியாலயத்தினரின் நடனமும் இடம் பெற்றது.

## தற்காலிக வேலை நீக்கம்

[சங்கானை]

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஊழியர் ஒருவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி வைத்தியசாலை அதிகாரிகளினுல் வழங்கப்படும் மருந்துச் சிட்டை இல்லாமல், மருந்து விநியோகிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதே தற்காலிக வேலைநீக்கத்திற்குக் காரணமாம்.

## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காசிப்பிள்ளை கணேசன், தேவாலய வீதி, யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ. இல. காசு. சு. 4306

எதிராக

தியோப்பிள்ளை பத்திநாதன், மூன்ரும் குறுக்குத்தெரு, நாவாந்துறை, தற்பொழுது வாடி வீடு, முன் தெரு, யாழ்ப்பாணம்.

எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப் பணம் ரூபா 1398/-க்கும் ரூபா 1165/-க்கும் 4-12-1969 தொடக்கம் 3-3-70 வரையும் 12% வட்டியும் அதன் பின் முழுத்தொகையும் கொடுக்கும் வரையும் 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 355-85 சதமும் இதில் ரூபா 200/- தீர்வைத்தொகையில் இருந்து 7-7-76ல் கழித்து 17-11-76ல் நடைபெறவிருந்த பிஸ்கால் விற்பனைச் செலவும், பிஸ்கால் செலவும், பவுண்டேச்சும் சேர்த்து அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை ''பாறையடிவடிக்கறை'' நிலப்பரப்பு 5ம் குழி $8\frac{1}{2}$யும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ லாசறஸ் அவர்களால் 1960-ம் ஆண்டு ஆவணி மாதம் 30-ந் திகதி 2762-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் வீ என்று குறிப்பிட்ட ஆதனம். இதில் எல்லைகள் கிழக்கு எஸ். ஞானப் பிரகாசத்திற்கும், எம். இன்னாசமுத்துக்குரியாதனம், வடக்கு நீக்கிலாப்பிள்ளை ஆசீர்வாதத்திற்கும் பெண்மாக்கிறேற்றுக்கும் உரியாதனம், மேற்கு றேட்டு, தெற்கு கே. வைத்திலிங்கத்திற்கும் மறு பேருக்குமுரியாதனம். இதில் பிரிக்கப்படாத $\frac{1}{2}$ பங்கு.

மு. பத்மநாதன்
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்,
12-10-1978.

0618

## யாழ்' தொழில்நுட்ப நிறுவனத்திற்கு
# நவீன ஆய்வு கூடம்
### உதவியளிப்பதாக யு. எஸ். ஸ்தானிகர் உறுதி

[கோண்டாவில்]

யாழ் பல்தொழில் நுட்ப நிறுவனத்திற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அன்பளிப்பாக சகல வசதிகளையும் கொண்ட நவீன மொழிப் பயிற்சி ஆய்வுகூடம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் திரு. ஏயர்ஸ் மேற்படி நிறுவனத்துக்கு மேற்கொண்ட விஜயத்தினையடுத்து இதுபற்றி தெரிவிக்கப்பட்டது

கடந்த ஆண்டு திரு. ஏயர்ஸ் இதே நிறுவனத்திற்கு விஜயம் செய்து நிறுவனத்தின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்டதன் பலனாக சுமார் 3,0000 ரூபா பெறுமதியான பல்வேறுவகையான மிக விலை உயர்ந்த நூல்கள் அன்பளிப்பாகக் கிடைத்திருந்தன.

குறுகிய நேர தமது விஜயம் நீடித்ததாலும் அக்குறுகிய நேர விஜயம் மிகவும் பயனுள்ளதாக அமைந்து நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் பல நன்மைகளை விளைவிக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் திரு. அயர்ஸ் விரிவுரையாளர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார். ஆய்வு கூடம் கிடைக்க உதவுவதாகத் தெரிவித்தார்.

தொழில் கூடங்கள் யாவற்றுக்கும், நூலகத்திற்கும் மாற விஜயம் செய்த திரு. அயர் ஸிடம், பதிரப் பிரதிகள் எடுக்கும் தன்னியக்க போட்டோஸ்டாட் இயந்திரம், மொழிப் பயிற்சி ஆய்வு கூடம், தொழிற் பயிற்சிக்கான வெட்டுக் கருவிகள் மற்றும் மொழியில் நூல்கள் ஆகியவற்றையும் தந்துதவுமாறு இறுவனத்தின் சார்பில் அதிபர் விரிவுரையாளரிகளால் அவரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மண்டப வாயிலில் வைத்து நிறுவன அதிபர் திரு. சி. டா. ஜெயசிங்கம், மற்றும் துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்களினாலும் இவர் வரவேற்கப்பட்டார்.

## கிளிநொச்சி பஸ்நிலையம்
# இடம் மாறும்

(கிளிநொச்சி)

பொதுமக்களின் நலன் கருதி கிளிநொச்சி பஸ்நிலையம் இடம் மாற்றப்பட்டு. புதிய வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் 20,000 ரூபாவை கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி ஒதுக்கியுள்ளார். (புலோலி-நிரு)

## கடைக்குச் சென்ற பெண் காரில் கடத்தப்பட்டார்!

(நெல்லியடி)

கடைக்கு பொருட்கள் வாங்கச்சென்ற இளம் சன்னிப் பெண் காரில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம், கரவெட்டி மேற்கு கிராய் பிள்ளையார் கோவிலடிப்பகுதியில் நிகழ்ந்துள்ளது.

கே. யோகேஸ்வரி என்னும் 16 வயதுடைய பெண்ணே கடத்திச் செல்லப்பட்டவராவார். இப்பெண் 35 வயது மதிக்கத்தக்க இரண்டு பிள்ளைகளின் தந்தையான சி. செல்லையா என்பவரால் கடத்திச் செல்லப்பட்டதாக பருத்தித்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பெண் கடத்தல் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜே. ஆர். நந்தலால், கான்ஸ்டபிள்கள் பண்டா, எஸ். குணரட்ணம் ஆகியோர் வரணி இயற்றாலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் பெண்ணையும் சந்தேக நபரையும் கைதுசெய்தார்கள்.

பெண்ணைக் கடத்தப் பயன்படுத்திய காரின்சாரதியையும் மற்றும் இருவரையும் பொலிசார் தேடுகின்றனர். பெண்ணையும் சந்தேக நபரையும் பொலிசார் வைத்தியபரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார்கள்.

## தமிழ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெரும் கருத்துமோதல் நிலவுவதாகச் சொல்கிறார்களே என்று கேட்டபோது-

அப்படி எதுவும் இல்லை என்று திட்டவட்டமாகக் கூறினார்.

அப்படி ஒரு கருத்து வேறுபாடு நிலவி மாவட்ட அமைச்சர் பதவியைக் கூட்டணி ஏற்பதை விரும்பாதவர்கள் எம். பி. பதவியை ராஜினாமாச் செய்கின்றார்கள் என்று வைத்துக்கொண்டால் உங்கள் நிலை எதுவாக இருக்குமென்று கேட்டபோது-

பதவியில் தொங்கிக்கொண்டிருக்கவேண்டும் என்ற நிலையில் நான் என்றுமே இருந்ததும் இல்லை; இருக்கப்போவதும் இல்லை. அப்படி ஒரு இக்கட்டான நிலையில் கூட்டணி இருக்குமாயின் எத்தகைய தியாகங்களையும் செய்து கட்சியின் ஒற்றுமையை கட்டிக்காப்பதற்கு முதல் ஆளாக நான் நிற்பேன் என்றார்.

அவர்மேலும் கூறியதாவது:

### யாழ். - முல்லைத்தீவை கூட்டணி ஏற்கமாட்டாது

இன்றைய சூழ்நிலையில் யாழ்ப்பாணம் — முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் பதவிகளை கூட்டணி ஏற்கவேமாட்டாது. மற்றைய தமிழ்ப்பிரதேசங்களில் மற்றவர்களை நியமித்துவிட்டு இந்த இரண்டு மாவட்டங்களையும் கூட்டணி ஏற்பதில் என்ன லாபமுண்டு? நாம் பாதுகாக்கவேண்டிய பிரதேசங்களை விட்டு இவை இரண்டையும் பெறக்கூடிய எந்த நிலையிலும் கூட்டணி இல்லை. தமிழ் ஈழ எல்லைகளை உள்ளடக்கிய மாவட்ட அமைச்சர் பதவி தொடர்பான நிலை ஏற்பட்டால் ஆலோசனைக்கு எடுக்கப்படலாம்.

கூட்டணியின் முடிவுகள் ஏகோபித்த முடிவுகளாகவே இருக்கும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற்கு இடமில்லை. அப்படியானவர்களை கொண்டு கூட்டணி உருவாக்கப்படவில்லை. விஷமத்தனமான புரளிகளையோ பிரசாரங்களையோ மனதில் வைத்துக்கொண்டு கூட்டணிமீது ஐயம் கொள்ளத் தேவையில்லை.

### கண்ணை விற்று சித்திரம் வாங்க கூட்டணி தயாரில்லை

கூட்டணி தன் இலட்சியப் பாதையை விட்டு என்றுமே விலகாது. தன் நோக்கத்தையோ இலட்சியத்தையோ தாரைவார்த்துவிட்டுப் பதவிகளைப் பற்றிப்பிடிக்க வேண்டும் என்ற நிலையில் இன்று கூட்டணி இல்லை கண்ணை விற்றுவிட்டுச் சித்திரம் வாங்குவதற்கு கூட்டணி என்றும் தயாரில்லை.

சொந்த விருப்பத்திற்கோ, சொந்த அபிப்பிராயத்திற்கோ விடுதலை இயக்கங்களில் இடமில்லை எதிலும் ஏகோபித்த முடிவுதான் இறுதிமுடிவு அந்த முடிவு எதுவோ அதுவே எங்கள் ஒவ்வொருவரினதும் முடிவாக இருக்கும். தியாகிகளால் ஏற்றிவைக்கப்பட்ட கூட்டணி எனும் தீபம், பதவி, பட்டம் என்ற புயல்களையும் எதிர்த்து நின்று ஒளிவீசிக்கொண்டிருக்கும். [இ]

## மொட்டையடித்த நிலையில்....

(யாழ்ப்பாணம்)

யாழ். வளாகத்தின் 'ருகிங்' எதிரொலியாக நான்கு புதிய மாணவர்கள், மொட்டையடித்த நிலையில் விரிவுரைகளுக்கு செல்லவில்லை எனத் தெரிகிறது.

தாம் விரிவுரைகள்முடித்து. வளாகத்துக்குள் இருந்து வெளியேறியபோது, குறிப்பிட்ட புதிய மாணவர்களை சிரேஷ்டமாணவர்கள் அழைத்துச்சென்று மொட்டையடிப்பித்தனராம். இச்சம்பவம் பற்றி பெற்றோர் வளாக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர். (கெ-இ)

1972 - 1978

## "இர்ண்டு சத்தியப்பிரமாணங்களுக்கும் பெரும் வித்தியாசம் உண்டு"

(யாழ்ப்பாணம்)

"72ம் ஆண்டு விடுதலைக் கூட்டணியினர் சத்தியப்பிரமாணம் எடுத்ததற்கும், 78ம் ஆண்டு சத்தியப்பிரமாண எடுத்ததற்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. 72ம் ஆண்டு சத்தியப்பிரமாணம் எடுத்தபோது தமிழ்ஈழம் பற்றிக் கூட்டணியினர் முடிவு எடுத்திருக்கவில்லை. 76ம் ஆண்டு மல்லாகம் மாநாட்டில்தான் தமிழ்ஈழம் பற்றி முடிவானது. அதன்பின்னர் 78ம் ஆண்டு கூட்டணியினர் சத்தியப்பிரமாணம் எடுத்தது தமிழினத்திற்கு அடித்த சாவு மணியாகும்"

மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடந்த கருத்தரங்கில் பேசிய தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் திரு. ஜி ஜி பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"தமிழ்ஈழம் அமைப்பதற்கு கடந்த தேர்தலில் தமிழினம் அங்கீகாரம் அளித்த பின்னர் சிங்களநாட்டிற்குச் சென்று சிங்களப் பாராளுமன்றத்தில் சிங்கள அரசியல் அமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப்பிரமாணம் செய்வதற்கு தமிழினம் கூட்டணியினருக்கு அங்கீகாரம் வழங்கவில்லை.

கூட்டணிப் பிரமுகரான திரு. ஜெயக்கொடி, கூட்டணியினர் சத்தியப்பிரமாணம் செய்யலாமா? என்று விடுத்த அறிக்கைக்கு பதிலளித்த மானிப்பாய் எம். பி. திரு தர்மலிங்கம், 72ம் ஆண்டு திரு ஜெயக்கொடியும் சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளதாகச் சுட்டிககாட்டியுள்ளார் 72ம் ஆண்டு சத்தியப்பிரமாணத்திற்கும் 78ம் ஆண்டு சத்தியப்பிரமாணத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு 76ல் தமிழ் ஈழக்கோரிக்கை எழுந்ததால், 78ல் சத்தியப்பிரமாணம் செய்தது தவறாகும்.

கூட்டணியினர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேர்தலில் வெற்றிபெற்றபின். அரசியல் சபை ஒன்றை உருவாக்கி. தமிழினத்திற்கு ஒரு அரசியல் சாசனம் உருவாக்குவதென உறுதியளித்திருந்தனர். தமிழ் ஈழம் அமைப்பதென்றஒரேஒரு கோரிக்கையைத்தான் கூட்டணியினர் முன்வைத்தனர். தமிழினம் ஆதரவளித்தது. ஆனால், தமிழினத்திற்களித்த உறுதிமொழியை மறந்து மாவட்டமந்திரிப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் மாவட்டமந்திரி பெறுவதற்கு தமிழினம் அங்கீகாரம் அளிக்கவில்லை.

தமிழ்க்காங்கிரஸ் உபதலைவர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் பேசுகையில், 47ம் ஆண்டுமுதலே, தமிழ்க்காங்கிரஸ், தமிழ்பிரதேசத்தின் பொருளாதாரத்திலேயே அக்கறை எடுத்து வந்திருப்பதாகக் கூறினார்.

திருவாளர்கள் ரி. மகேந்திரராசா, கே பஞ்சலிங்கம் ஆகியோரும் பேசினார்கள். (க-அ)

## பிரிட்டிஷ் தூதுவர் இன்று உரை

[யாழ்ப்பாணம்]

ஐக்கியநாடுகள் சபை யாழ். கிளையும், யாழ். லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்தும் ஐக்கிய நாடுகள் தினவிழா இன்று மாலை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது

விழாவுக்கு ஐக்கிய நாடுகள் சபை யாழ். கிளைத் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமைவகிப்பார். பிரிட்டிஷ் இலங்கைத் தூதுவர் திரு. டி பி. அயர்ஸ் "பிரித்தானியாவின் காட்சிகளும், காமன்வெல்த் நன்கொடைகளும்" என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார். இங்கிலாந்தில் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் கல்வி வசதி, வேலைவாய்ப்புகள், குடியகல்வு பற்றிய விபரங்களையும் அவர் எடுத்து விளக்குவார். [செ]

## இந்திய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டப்பா விஸ்வநாத் 145 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே இவர் டெஸ்ட் ஆட்டத்தில் பெற்ற ஆகக்கூடிய ஓட்டமாகும் வெங்சர்கார் 83 ஆட்டங்களைப் பெற்றார். பாகிஸ்தான் காப்டன் 55 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

அடுத்து துடுப்பாடிய பாகிஸ்தான் தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கட் இழப்பின்றி 34 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கோர் விபரம்; பாகிஸ்தான் 503-8, 34-0 இந்தியா 462-9 (இ)

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை இளையதம்பி

தெல்லிப்பழை விழாப்போலையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை இளையதம்பி காலமானார். இவர் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் கணவரும், இளைப்பாறிய சி.ஐ.டி. சரவணமுத்து, காலஞ்சென்ற தம்பிராசா, காலஞ்சென்ற தர்மலிங்கம், பரந்தன் விவசாய நிர்வாக உத்தியோகஸ்தர் சபாரத்தினம், திருமதி தங்கரத்தினம், கனகசுந்தரம், இளைப்பாறிய புகையிரத ஊழியர் சிவசம்பு, முல்லைத்திவு உணவுப்பகுதி ஊழியர் சிவப்பிரகாசம், திருமதி தனலட்சுமி நடராசா ஆகியோரின் தகப்பனுருமாவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் இன்று (21-10-78) மாலை 4-00 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக கொத்தியால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 0624

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பெரியபுலம் கனிஷ்ட மகாவித்தியாலய பழைய மாணவர் ஒன்றியக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் இ. கணேசராசா தலைமையில் நடைபெறுகிறது. (கா-இ)

## மரண அறிவித்தல்

### டாக்டர் P. T. கனகரத்தினம்

தெல்லிப்பழை டச்சுவீதி டாக்டர் தில்லையம்பலம் கனகரத்தினம் காலமாகிவிட்டார். அரசாங்க பதிவு செய்த வைத்தியர் சங்கத்தின் முன்னாள் தலைவராகிய அன்னார் மங்களபூவதியின் அருமைக்கணவரும், இங்கிலாந்து பல்வைத்திய நிபுணர் சாந்தினி, யாழ். ஆஸ்பத்திரி வைத்தியர் இரஞ்சினி, தங்காலை பிரத்தியேக வைத்தியர் குணம், யாழ்ப்பாணத்து சட்டத்தரணி இராஜி; நளாயினி. துஷ்ஷாயினி ஆகியோரின் தந்தையும், இங்கிலாந்து வைத்திய நிபுணர் M. செல்லப்பா, யாழ்ப்பாணத்துச்சட்டத்தரணிகள் இராஜஇராஜேஸ்வரன் தங்கராசா, R. P. சபாரத்தினம், அங்கொடை ஆஸ்பத்திரி வைத்தியர் சுனிதா ஆகியோரின் மாமனாரும். முன்னாள் பரமேஸ்வராக்கல்லூரி இளைப்பாறிய ஆசிரியர் செல்லத்துரை. காலஞ்சென்ற கனுத்தறை இராஜரத்தினம், அவுஸ்திரேலிய வர்த்தக காரியாலயம் மயில்வாகனம். காலஞ்சென்ற கைலாசபதி ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் தெல்லிப்பழை டச்சுவீதி இல்லத்தில் இன்று (21-10-78) சனிக்கிழமை மாலை 3-00 மணியளவில் நடைபெறும்.

0620

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu, Telephone 380 Registered Newspaper in Sri lanka